[12th February 1959

Agricultural population

* 259 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the percentage of population in the State employed in agriculture during 1951; and

(*b*) the percentage of population transferred from agricultural to non-agricultural pursuits during the First Five-Year Plan period, and the first two years of the Second Five-Year Plan period?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The percentage of population in the Madras State (as now constituted) employed in agriculture during 1951 was 62·8.

(*b*) There appears to be a slight trend towards preference of non-agricultural operations among classes not owning lands due to attraction of urban life. It is not possible to express this in any definite terms or percentage as we have no statistics for it.

Sri S. LAZAR : Is not the development to be measured in terms of the percentage of population transferred to other occupations? May I know what steps the Government propose to take to know the exact percentage that is being transferred?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The Government do not think it is just now necessary to take up that statistical work.

Sri K. ANBAZHAGAN : நம்முடைய மாநிலத்தில் உழுவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுடைய சராசரித் தொகை—விகிதாசாரம்—அதிகமாக இருக்கும் காரணத்தால் வாழ்க்கைத்தரம் குறைகிறது என்று உணர்ந்திருக்கும் அரசாங்கம், அவர்களில் எந்த அளவு மக்கள் நிலத்தை நம்பி வாழ முடியுமோ அந்த அளவு தவிர மிதமுள்ள தொகையினருக்கு வேறு தொழிற் துறையிலே இடம் கொடுக்கும்படியான அளவு தொழிற் துறையை வளர்ப்பதற்கும் புதிய தொழில்களைத் துவங்குவதற்கும் அரசாங்கம் ஏதேனும் திட்டமிட்டிருக்கிறதா ? எந்த நோக்கத்தோடு செயற்பட்டு வருகிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பெரிய தொழில்களைப் பொறுத்தவரையில், ஒருசில பெரிய தொழில்கள்—கன ரகத் தொழில்கள் தான் அமைக்கலாம். அவ்வாறு அமைத்தால் கிராமங்களிலே வேலை இல்லாமலிருக்கும் அல்லது போதிய வேலை இல்லாமல் உள்ள அனைவருக்கும் வேலை கொடுக்க முடியாது. இப்பொழுதிருக்கும் பெரிய தொழில்களிலே வேலை செய்பவர்களை யெல்லாம் சேர்த்துக் கணக்கிட்டால் இரண்டு அல்லது மூன்று லட்சம் பேர்களுக்கு மேலே இருக்காது. ஆகவே, சிறிய தொழில்களைப் பரவலான முறையில், அமைப்பதற்கு இன்னும் தீவிரமான முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது, நிலத்தை நம்பி இருக்கிறவர்களுக்காக கூட்டுறவு ஸ்தாபனங்களை இன்னும் விரிவாக அமைத்து, அவைகளின் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri K. B. S. MANI : சிறிய தொழிற்சாலைகள் அமைத்து அவைகளிலே விவசாயிகளுடைய குழந்தைகளை வேலை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வரும்போது, அவர்கள் இன்ன கல்வித் தகுதியுடையவராக இருக்கவேண்டும் என்ற வரையறை இருப்பது, விவசாயிகளுடைய குழந்தைகளுக்கு மிகத் த்டையாக இருக்கிறது. அநத வரையறையைக்

12th February 1959]

குறைத்து, அம்மாதிரி இன்ஸ்டிட்யூட்டிலே சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் விதிவிலக்கு கொடுத்தால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பயிற்சிக்கு வருகிறவர்களுக்கு, படிப்பு குறைந்தபட்சமாக என்ன இருக்கவேண்டும் என்பதிலே எவ்வளவு குறைவாக வைக்க முடியுமோ அவ்வாறு தான் வைக்கப் பட்டிருக்கிறது.

SRI N. MARUDACHALAM : விவசாயிகள் என்னும்போது பெரு நில விவசாயிகள், சிறு நில விவசாயிகள், நிலமே இல்லாத விவசாயிக் கூலிகள் என்று பிரிவுப்படுத்தி. ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை பேர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அது பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஜில்லாவாரியாக எத்தனை எத்தனை பேர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

MR. SPEAKER : How can the Hon. Minister answer the question? When Members want such information, it is better they put separate questions.

SRI K. ANBAZHAGAN : விவசாயத்துறையிலே ஈடுபட்டுள்ளவர்களுடைய தொகை மொத்த மக்களில் 50 சத விகிதத்திற்கு மேற்படாத அளவுத் தான் இருக்கவேண்டும் என்று கொண்டு, மீதமுள்ளவர்களை—விவசாயத் தொழிலில் உள்ளவர்களை—வேறு தொழில் துறைகளிலே செலுத்துவதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது வழிவகை காணுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கத்தின் தொழில் வளர்ச்சித் திட்டத்தின் லட்சியம் அதுதான்.

Bhavanagar Fund

*260 *Q*.—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) how much contribution from the Bhavanagar Fund was allotted to Tirunelveli district for the current year;

(*b*) for what purpose the allotment for the Tirunelveli district was utilised; and

(*c*) the procedure for applying for help from that fund?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Rs. 210 (rupees two hundred and ten only).

(*b*) To afford financial assistance to three poor tuberculosis patients.

(*c*) Applications should be submitted to the Secretary to Government, Health, Education and Local Administration Department, Madras-9, through the Director of Medical Services,